Name of the Newspaper: Dinamani Date: 20/8/17

# மெட்ரோ ரயில் நிலையப் பணிகள்: புதிய தலைவர் ஆய்வு



சென்னையில் மெட்ரோ ரயில் நிலையப் பணிகளை சனிக்கிழமை பார்வையிடும் மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை செயலரும், மெட்ரோ ரயில் நிறுவனத்தின் புதிய தலைவருமான துர்கா சங்கர் மிஸ்ரா (நடுவில்).

**சென்னை, ஆக. 19:** சென்னையில் நடைபெற்று வரும் மெட்ரோ ரயில் நிலையப் பணிகளை, மத்திய வீட்டு வசதி - நகர்ப்புற அமைச்சகத்தின் செயலரும், மெட்ரோ ரயில் நிறுவனத்தின் புதிய தலைவருமான துர்கா சங்கர் மிஸ்ரா சனிக்கிழமை ஆய்வு செய்தார்.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே பிரம்மாண்டமாக கட்டப்பட்டு வரும் சுரங்க மெட்ரோ ரயில் நிலைய கட்டுமானப் பணிகளை அவர் பார்வையிட்டார்.

மேலும் மெட்ரோ ரயிலில் பயணம் செய்து கீழ்ப்பாக்கம், ஈக்காட்டுத்தாங்கல் ரயில் நிலையங்களையும், கீழ்ப்பாக்கம் மருத்துவமனை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ ரயில் நிலையத்தின் செயல்பாட்டு அறையையும் அவர் ஆய்வு செய்தார்.

'சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் மெட்ரோ ரயில் போக்குவரத்துப் பணிகள் திருப்தி அளிப்பதாகவும், மெட்ரோ ரயில்களும், ரயில் நிலையப் பராமரிப்புப் பணிகளும் சிறப்பாக உள்ளது' என அவர் கூறினார்.